Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04)



CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 20 December 2024 Click - 09 ₹. 1

அன்பார்ந்த மூத்த உறுப்பினர்களே!

நமக்கு நாமே குடும்ப நலப் பாதுகாப்பு திட்டத்தில், டிசம்பர் மாதம் 31ஆம் தேதி 2024 வரை மட்டுமே, வயது வரம்பின்றி சீனியர் போட்டோகிராபர்களும், வீடியோகிராபர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஜனவரி மாதம் ஒன்றாம் தேதி 2025க்கு பிறகு 60 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே நமக்கு நாமே திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு : **துரைபாபு**, செயலாளர்

# சென்னையில் டிசம்பர் 20, 21, 22 ஆகிய மூன்று தினங்கள் டிஜி மீடியா 2024 போட்டோ வீடியோ கண்காட்சி

சென்னையில் டிஜி மீடியா 2024 போட்டோ வீடியோ கண்காட்சி பிரம்மாண்டமான முறையில் நடைபெறுகிறது. இதுகுறித்து தமிழ்நாடு வீடியோ – போட்டோகிராபர்ஸ் அசோசியேஷனின் மாநிலத் தலைவர் சிவகுமார் அவர்கள் நமது CVPA நியூசுக்கு அளித்த செய்தியின் விபரம் வருமாறு..

தமிழகத்தில் உள்ள 37 மாவட்ட சங்கங்களின் கூட்டமைப்பாக தமிழ்நாடு வீடியோ – போட்டோகிராபர்ஸ் அசோசியேசன் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. நம்மோடு இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாவட்ட சங்க உறுப்பினர்களின் தொழில் வளர்ச்சியை கருத்தில் கொண்டு மாநில சங்கம் சார்பாக, புகைப்படக் கலைஞர்களால், புகைப்படக் கலைஞர்களுக்காகவே நடத்தவிருக்கின்ற சர்வதேச தரத்திலான மாபெரும் போட்டோ வீடியோ தொழில்நுட்ப கண்காட்சி டிஜி மீடியா 2024 வரும் டிசம்பர் மாதம் 20 , 21 , 22 ஆகிய மூன்று தினங்கள் சென்னை, நந்தம்பாக்கம், டிரேட் சென்டரில் சிறப்பாக நடைபெற உள்ளது. இது நமது கலைஞர்களின் அடுத்த பரிணாம வளர்ச்சிக்கு, முன்னெடுத்து செல்லும் ஒரு நிகழ்வாக இந்த ஐந்தாவது போட்டோ வீடியோ கண்காட்சி அமையும் என்று எதிர்பார்க்கிறோம்.

டிஜி மீடியா 2024 போட்டோ வீடியோ கண்காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட பன்னாட்டு முன்னணி நிறுவனங்களின் அரங்கங்கள் அமைய உள்ளன. ஒவ்வொரு அரங்கமும் நம் தொழில் சார்ந்த நவீன புகைப்பட கருவிகளும், புதுப்புது வரவுகளும், நமது கலைஞர்களை ஊக்கப்படுத்தும் விதமாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

டிஜி மீடியா 2024 போட்டோ வீடியோ கண்காட்சியை காண தமிழகம் முழுவதும் இருந்து ஒளிப்பட கலைஞர்கள் வருகை தர இருக்கின்றார்கள். இவர்கள் சிரமம் இன்றி வந்து செல்வதற்கு ஏற்ப ரெப்ரெஷ் செய்ய வசதியாக சென்னையில் தெற்கு மற்றும் மேற்கு பகுதியில் இரண்டு திருமண மண்டபங்கள் அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர அவர்களுடைய உடமைகளை பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ள பாதுகாப்பு வசதியும் கண்காட்சி அரங்கத்தில் செய்யப்பட்டுள்ளது. கண்காட்சியில் வாங்கும் பொருட்களை பத்திரமாக கொண்டு போய் சேர்க்க பார்சல் சர்வீஸ் வசதியும் கண்காட்சி அரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். அனைவருக்கும் ஆங்காங்கே சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் அருந்த வசதி செய்து தரப்பட்டுள்ளது.

டிஜி மீடியா 2024 போட்டோ வீடியோ கண்காட்சியை காண வரும் நமது கலைஞர்கள் பயன்பெறும் வகையில் நமது துறையில் பிரசித்தி பெற்ற பயிற்றுநர்களைக் கொண்டு பல்வேறு பயிற்சி பட்டறைகளுக்கு இங்கே ஏற்பாடு செய்திருக்கின்றோம்.

நடைபெற இருக்கின்ற டிஜி மீடியா 2024 ல் மாநில சங்கம் சார்பாக நான்கு முத்தான முக்கிய நிகழ்ச்சிகள் நடைபெறுகிறது. குறிப்பாக நமது மாநில சங்கத்தில் அங்கம் வகிக்கும் பல்வேறு மாவட்ட சங்கங்களின் செயல்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்தையும் ஊக்கப்படுத்தும் விதமாக அந்தந்த மாவட்ட சங்கங்களுக்கு விருதுகள் வழங்க ஏற்பாடு செய்திருக்கின்றோம். இதனைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டமும் பரிந்துரைக்கும் மூன்று மூத்த புகைப்பட கலைஞர்களை கௌரவப்படுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற இருக்கிறது.

இதைப் போலவே ஒவ்வொரு மாவட்ட சங்கமும் பரிந்துரைக்கும், பல்வேறு துறைகளில் சிறந்து விளங்கும் நமது புகைப்பட கலைஞர்களின் மூன்று வாரிசுகளின் பிள்ளைகளை குடும்பத்துடன் வரவழைத்து கௌரவப்படுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது. மேலும் தமிழ்நாடு முழுவதும் உள்ள நமது கலைஞர்களை ஒன்றிணைக்கும் விதமாக உறுப்பினர்களின் குடும்ப நல பாதுகாப்பு திட்டமான காக்கும் கரங்கள் திட்டத்தின் துவக்க விழாவும் இங்கே நடைபெற உள்ளது. இதன் நிகழ்ச்சி நிரல் நேரம் தினம் தினம் கண்காட்சியில் அறிவிக்கப்படும்.

டிஜி மீடியா 2024 சிறப்பாக அமைய சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம் நமது மாநில சங்கத்தோடு இணைந்து சிறப்பாக பணியாற்றி வருகிறது. இந்த கண்காட்சியைக் காண சென்னை மாவட்ட சங்க உறுப்பினர்கள் அனைவரும் வருகை தந்து சிறப்பிக்குமாறு உங்கள் அனைவரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு தமிழ்நாடு வீடியோ – போட்டோகிராபர்ஸ் அசோசியேசன் தலைவர் சிவகுமார் அவர்கள் தனது செய்தி குறிப்பாக வெளியிட்டுள்ளார்.

## டிஜிமீடியா 2024 போட்டோ வீடியோ கண்காட்சியை முன்னிட்டு ரீல்ஸ் மற்றும் புகைப்பட போட்டிக்கு ஏற்பாடு

தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர்ஸ் அசோசியேஷன் சார்பாக சென்னையில் நடைபெறவுள்ள ஐந்தாவது டிஜி மீடியா 2024 போட்டோ – வீடியோ கண்காட்சியில் கலந்து கொள்ள உள்ள ஒளிப்பட கலைஞர்களை ஊக்குவிக்கும் விதமாக உணர்வுகளின் சங்கமம் எனும் தலைப்பில் ஒரு நிமிட எச்டி வீடியோ ரீல்ஸ் போட்டிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இப்போட்டியில் இன்றைய இளம் ஒளிப்பட கலைஞர்கள் பலரும் கலந்து கொண்டு தங்கள் திறமையை வெளிப்படுத்த உள்ளனர். மேலும் கலகலப்பு எனும் தலைப்பில் புகைப்பட போட்டிக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்விரு போட்டிகளிலும் வெற்றி பெறும் முதல் மூன்று நபர்களுக்கு நினைவு பரிசுடன், சான்றிதழ் வழங்கி பாராட்டப்பட உள்ளனர்.

## டிஜி மீடியாவில் கிரீன் மேட் தொடர்பான பயிற்சி பட்டறை

ஐந்தாவது டிஜி மீடியா 2024 போட்டோ வீடியோ சர்வதேச கண்காட்சியில் திரைப்பட உலகில் ஒளிப்பதிவாளர்களை உருவாக்கி வரும் சினிமா பேக்டரி பிலீம் இன்ஸ்டியூட் மிக முக்கியமாக அரங்கம் அமைக்க உள்ளது. திரைஉலகில் முன்னணி ஒளிப்பதிவாளர்களை, பயிற்சியாளர்களாக கொண்டு நடத்தப்படும் சினிமா பேக்டரி பிலீம் இன்ஸ்டியூட் சார்பாக டிஜி மீடியாவில் சிறப்பு பயிற்சி பட்டறைக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த பயிற்சி பட்டறையில் இன்றைய இளம் தலைமுறையினர் ஆர்வத்துடன் கற்றுக் கொள்ள விரும்பும் நவீன 3டி மற்றும் கிரீன் மேட் தொழில்நுட்பத்தை நவீன முறையில் கையாளுவது குறித்து லைவ் டெமோ நிகழ்ச்சியை இங்கு நடைபெறும் பயிற்சி பட்டறையில் காட்சிப்படுத்தப்பட உள்ளது.

இந்த இன்ஸ்டியூட்டில் மூன்று மாத காலம் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள பயிற்சி கட்டணமாக 65 ஆயிரம் ரூபாய் பெறப்படுகிறது. தமிழ்நாடு வீடியோ போட்டோகிராபர் அசோசியேசன் அமைப்பில் சார்ந்துள்ள மாவட்ட சங்கங்களுக்கு கட்டணத்தில் பத்தாயிரம் ரூபாய் வரை சலுகை வழங்க உள்ளது.

## நமக்கு நாமே திட்டத்தில் விண்ணப்பிக்க டிசம்பர் 31ஆம் தேதி கடைசி நாள்

CVPA உறுப்பினர்களுக்கு வணக்கம்!

கடந்த நான்கு மாதங்களாக நமது சங்கத்தின் ரினிவல் நன்றாகவே உள்ளது. நமது சங்க அலுவலகம் ஜனவரி முதல் ஏற்கனவே நாம் பயன்படுத்தி வந்த பங்காரு நாயக்கன் தெருவிற்கே மாற்றப்பட உள்ளது. இது 15 லட்ச ரூபாய் லீஸ் என்ற அடிப்படையில், அலுவலகம் இடம் மாற்றப்பட உள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். நமது நிர்வாகம் பொறுப் பேற்ற பிறகு, இரண்டு மாதங்கள் சென்ற நிலையில் அக்டோபர் மாதம் முதல் 'நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு எனும் திட்டத்தை' விரைந்து செயல்படுத்தி தற்போது கிட்டத்தட்ட 500 உறுப்பினர்கள் வரை நமக்கு நாமே திட்டத்தில் உறுப்பினர்களாக சேர்ந்துள்ளனர். மிகக் குறுகிய காலத்தில் இவ்வளவு உறுப்பினர்களை இணைத்து இருப்பது சாதாரண விஷயம் இல்லை. இத் திட்டத்திற்காக நம்முடன் இணைந்து பணியாற்றிய நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், மற்றும் பிறருக்கு உதவி செய்யும் நோக்கத்துடன் பிரதிபலன் பாராமல், ஆர்வத்துடன் கலந்து கொண்ட நல்ல உள்ளங்களால் மட்டுமே இது சாத்தியமானது. மனம் மகிழ்ந்து இவர்களை பாராட்டி, நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம். இன்னும் பலர் இத்திட்டத்தில் இணைவதற்கு ஆர்வத்துடன் காத்திருக்கிறார்கள். இவர்களின் கோரிக்கையை ஏற்று, நமக்கு நாமே திட்டத்தில் சேர்வதற்கான கடைசி தேதி டிசம்பர் 31 வரை நீடிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் 20, 21, 22 தேதிகளில் நடைபெறும் டிஜி மீடியா கண்காட்சியின் போது CVPA Stall க்கு வருகை தரும் நமது சங்க உறுப்பினர்கள் நமக்கு நாமே திட்டத்திற்கான விண்ணப்ப படிவத்தை பெற்று பூர்த்தி செய்து கொடுக்குமாறு அனைவரையும் கேட்டுக் கொள்கிறோம்.

இந்த அரிய வாய்ப்பை தவறாமல் அனைவரும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம். நாம் ஏற்கனவே தெரிவித்தது போல் ஜனவரி 15ஆம் தேதி முதல் இத் திட்டம் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இத்திட்டத்திற்காக வடிவமைக்கப்பட்ட பிரத்தியேகமான ஆப்பும் (APP) ஜனவரி மாதத்தில் நடைமுறைப் படுத்தப்படும். நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தில், உங்களது விண்ணப்பம் ஏற்றுக்கொண்ட நாளில் இருந்து, 90 நாட்களில் நமக்கு நாமே குடும்ப பாதுகாப்பு திட்டம் செயல்பாட்டிற்கு வரும் (முன்பு 120 நாட்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது) என்று, தற்போது மாற்றம் செய்து அறிவிக்கப்படுகிறது. நடைபெற இருக்கின்ற டிஜி மீடியா கண்காட்சியில் நமது சங்கத்தை சார்ந்த அனைத்து உறுப்பினர்களும் தவறாமல் கலந்து கொண்டு பயன்பெற வேண்டுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இப்படிக்கு : துரைபாபு, CVPA செயலாளர்


TAMILNADU VIDEO & PHOTOGRAPHERS ASSOCIATION
PRESENTS
ORGANISERS
FOTOTECH Private Limited
EditPoint
A Mega Photo and Video Imaging Exhibition
5th Edition
FREE ENTRY
TVPA'S
Digi Media
2024
(march towards technology)
December
20 21 22 2024
Supported By
PPAI
TAMILNADU VIDEO & PHOTOGRAPHERS ASSOCIATION
REGD.OFF:42, SINGARATHOPE, TRICHY - 620008.
ADMIN OFF : 8C, ANNAI COMPLEX, THIRUVALLUVAR SALAI, DINDIGUL - 624001, TAMILNADU.
For Further Details Con: 94432 01656 / 98421 98850 / 94435 10295
Scan QR to Register to get E-PASs and Become a PARIVAR MEMBER today
POWERED BY
FOTOTECH PARIVAR INDIA PVT.LTD
சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்
நெ : 48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை - 600 002

TAMILNADU VIDEO & PHOTOGRAPHERS ASSOCIATION TVPA REGD No : 32/97 TM

TVPA's 5th Digi Media 2024 (March towrds technology)

PHOTO, VIDEO & IMAGING FEST

DECEMBER 20 21 22

CHENNAI VIDEO PHOTOGRAPHER'S ASSOCIATION CVPA Regd. No. : 446-96

# DIGI MEDIA WORK SHOP



## Digi Media 5

Title: **IMAX Filmmaking Session**
Speaker : **CJ Rajkumar**, Author & Cinematographer

Event Date : **December 20th**

Hosted By : **Cinema Factory Academy**

**About the Speaker:**

CJ Rajkumar is a renowned cinematographer and author who has penned 13 groundbreaking books on cinematography, including the first-ever in Tamil. His works have received immense praise from legendary filmmakers like P.C. Sreeram and Balu Mahendra for their depth, clarity, and contribution to the art and craft of filmmaking.

With a deep passion for sharing knowledge, CJ Rajkumar has inspired countless budding cinematographers to approach the visual medium with innovation and precision.

**Session Focus:**

This session will delve into the technical, creative, and operational aspects of IMAX filmmaking, exploring: The journey from traditionalfilm formats to IMAX.

The use of IMAX-certified cameras and digital advancements.

Insights into capturing cinematic grandeur for larger-than-life storytelling.

Join us for an enlightening experience with an expert who bridges cinematic tradition and modern innovation!



## Digi Media 5

Title : **Anamorphic Lens: Digital Era**

Speaker: **A. Ramesh Kumar,** Cinematographer

Event Date: **December 20th**
Hosted By: **Cinema Factory Academy**

**About the Speaker:**
A. Ramesh Kumar is a visionary cinematographer who revolutionized the use of the Cinemascope format in Indian cinema. Known as a trendsetter, his achievements include:

Shooting the iconic Oomai Vizhigal, a landmark in Tamil cinema.

Executing over 800 commercials with a blend of creativity and technical expertise.

Capturing the thrilling Rekla Race with innovative shots ranging from 80 feet to 500 feet, a first in India.

Coordinating and shooting sequences using 9 Cinemascope cameras simultaneously, showcasing his unparalleled technical skill.

This event will explore the evolution of anamorphic lenses in the digital era, reflecting on their cinematic potential and how they've shaped modern storytelling.

Join us to learn from the master himself!



## Digi Media 5

Title: **Trends and Creative Composition in Photography**

Speaker: **R. Prasana Venkatesh, Award-Winning Photographer**

Event Date: **December 21st**

Hosted By: **Cinema Factory Academy**
**About the Speaker:**

R. Prasana Venkatesh is a celebrated photographer with a rich portfolio that includes work for prestigious brands like Rolls Royce, Kalakshetra, and National Geographic. With over 1 lakh YouTube subscribers, he is not only an accomplished artist but also a respected educator who shares his expertise with a vast audience. An award-winning professional, his work is known for its exceptional creativity and technical brilliance.
**Session Focus:**

This session will explore the latest trends in photography and the art of creative composition, covering: Aesthetic and technical aspects of modern photography.

Mastering composition for impactful visual storytelling. Insights into working with diverse subjects and themes for various prestigious platforms.

Join us to gain valuable knowledge from a leading expert who blends artistic vision with technical mastery!




## Digi Media 5

Title: **VFX to Virtual Production**

Speakers: **Shiv Shankar & Aravind Naga**

Event Date: **December 22nd**

Hosted By: **Cinema Factory Academy**

About the Speakers: Shiv Shankar and Aravind Naga are pioneers in virtual production, with extensive experience working on prestigious Indian films and advertisements. Their expertise bridges the gap between traditional VFX techniques and cutting-edge virtual production technologies, redefining how stories are brought to life on screen.

**Session Focus:**

This session will cover the transformative journey from VFX to virtual production, including:

Understanding virtual production pipelines.

Integrating real-time technologies with traditional filmmaking methods.

Insights from their work on great projects.

Don't miss this opportunity to learn from two trailblazers shaping the future of filmmaking!



**SHANMUGAVEL**
Actor
Topic : **Sharing the Experience**



**2025**
**AI**
**LIGHTROOM AND PHOTOSHOP**

**VELAIKKARAN SENTHIL & TEAM**

**J.N.JEGANATHAN**
**TRAVEL PHOTOGRAPHY**



தென் சென்னை எஸ்1, விருகம்பாக்கம் பகுதி உறுப்பினரும் மூத்த புகைப்பட கலைஞருமான திரு.மகேந்திரன் – கீதா மகேந்திரன் இவர்களின் மகள் சோபனா– பந்தளராஜ் திருமணத்திற்கு நமது சங்க தலைவர், செயலாளர், துணைத் தலைவர், பகுதி செயலாளர் ஆகியோர் மணமக்களை நேரில் சென்று வாழ்த்தினார்கள்.



தென் சென்னை எஸ்2, பல்லாவரம் பகுதியை சேர்ந்த நமது சங்கத்தின் ஆயுட்கால உறுப்பினர் பம்மல் ரேவதி ஸ்டுடியோ பாண்டுரங்கன் அவர்களின் மகள் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க தலைவர், செயலாளர், பி ஆர் ஓ, இணைச் செயலாளர் மற்றும் பகுதி செயலாளர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



மத்திய சென்னை, பட்டாளம் பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் அருண் டிஜிட்டல் ஸ்டுடியோ ரவிச்சந்திரன்– பரிமளா இவர்களின் மகன் அருண்– ஜீவஸ்ரீ க்கு நடைபெற்ற திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க தலைவர், செயலாளர், துணைத் தலைவர், பகுதி செயலாளர் ஆகியோர் நேரில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார்கள்.



தென் சென்னை எஸ்–1, தேனாம்பேட்டை பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் வெங்கடேசன் அவர்களின் மகன் பாலாஜி– தீபிகா பாலாஜிக்கு நடைபெற்ற சீமந்த நிகழ்ச்சியின் போது எடுக்கப்பட்ட புகைப்படம்

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351